IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ‘எஞ்சோட்டுப் பெண்’ – கவிதை நூலில் பெண் பதிவுகள்

Women’s Entries in ‘Enjoottupen’ Poem Book

**த. மார்கரெட் மாலதி,**

முனைவர் பட்ட ஆய்வாளர்,

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயமுத்தூர்.

## முன்னுரை

பெண்ணியம் என்பது ஒரு பெண்ணை ஓர் உயிர் எனச் சமூகம் அங்கீகரித்து அவளுக்கு ஆணுக்கு நிகராக உரிமையையும், சுதந்திரத்தையும் கொடுக்கத் தூண்டும் கொள்கை என்று கூறலாம். பல்வேறு சூழல்நிலைகள் காரணமாக பெண்கள் பல்வேறு பிரச்சனைகளுக்கு உள்ளாகுவது உண்டு. இதனை நேருக்கு நேர் நம்முடைய வீட்டிலேயே கண்ணார நாம் காணுகின்றோம். இந்த இன்னல்களைத் தாங்கிக் கொள்ள முடியாத பெண்கள் மனதிற்குள் பூட்டி வைத்துக்கொள்கின்றனர். ஆனால், இதிலிருந்து மீண்டு தனக்கான உரிமையும், சுதந்திரத்தையும் பல பெண்கள் போராடி வாங்கியுள்ளனர். சமுதாயத்தில் தற்போது உன்னத நிலைகளில் முன்னேறியும் உள்ளனர். அந்த வழியில் தமிழச்சி தங்கபாண்டியன் ஒரு தனித்துவமான கவிஞரும் பெண்ணியவாதியும் கூட அவர்தம் எஞ்சோட்டுப் பெண் என்னும் கவிதை நூலில் காணப்பெறும் பெண்ணியக் கூறுகளை இக்காட்டுரையானது ஆராய்கிறது.

## ஆய்வு நோக்கம்

தமிழச்சி தங்கபாண்டியன் கவிதை நூல்களில் ஒன்றான எஞ்சோட்டுப் பெண்ணில் காணலாகின்ற பெண்ணின் மனம், பகிர்வு, சுதந்திரம், தனிமை, உரிமை போன்றக் கூறுகளை ஆராய்ந்து பெண்களின் நலனுக்குத் தீர்வு காணுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வுத் தலைப்பு

“எஞ்சோட்டுப்பெண் கவிதை நூலில் பெண் பதிவுகள்” – என்பது இக்கட்டுரையின் தலைப்பாகும்.

**பெண்ணியம்**

"அன்றிலிருந்து இன்று வரை நமது சமுதாயம் என்பது ஆண்களின் உலகமாகவே இருந்து வருகிறது"1 இந்த ஆண் சமூகத்தில் பெண்கள் தங்களை முன்னிலைப்படத்திக் கொள்வதற்கும் தங்களை முன்னேற்றிக் கொள்வதற்காகவும் பலவிதமான போராட்டுங்களை நடத்தி வருகின்றனர். அப்போதைய காலகட்டங்களில் பெண் குழந்தை பிறந்தாலே கள்ளிப் பால் கொடுத்து கொல்லும் அளவிற்கு சமுதாயம் விளங்கிற்று,

பெண்கள் கிளிகளாம்

உவமை சரி

நெல்மணி?

என்று கூறும் இக்கவிதையில் உசிலம்பட்டி சேலம் பகுதியில் நெல்மணிகளை பாலில் இட்டு பெண் குழந்தைகளை கொன்ற செய்தியினைக் காணமுடிகிறது.

**பெண்ணியத் திறனாய்வு**

"பெண்ணியத் திறனாய்வு பாலியத்தை முதன்மைப்படுத்துகிறது. ஆண் முதன்மைப்படுத்தப் படுவதையும் மறுக்கிறது. ஆண்களால் சொல்லித்தரப்பட்டக் கருத்தாக்கங்கள், மரவுகள், மதிப்பீடுகளை மறு உற்பத்தி செய்ய உதவுகிறது"2

ஒரு பெண் எத்தனை அழகானக் கடிதங்களை எழுதிடினும், அந்தக் கடிதத்தின் மேல் அங்கீகாரமாய் ஒரு முகவரி எழுதப்படாமல் விட்டால் அந்தக் கடிதம் கட்டாயமாகக் குப்பை சேர்ந்து விடும். பெண்ணும் அப்படித்தான் அவளுக்கு முழு அங்கீகாரம் கொடுக்கப்படவில்லை எனில், அவளை இச்சமூகம் குப்பையாகத் தான் மதிக்கிறது என்பதை பெண் உணர்வின் வாயிலாக இக்கவிதையில் வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

"உரையின் மேல்

அங்கீகார முகவரி

எழுதப்படாவிடின்

மிக சுலபமாய்

பிரிக்கப்பட்டு

சிதைக்கப்பட்டு

அவை குப்பை சேரும்.."3

பெண்ணின் எழுத்துக்களை மட்டுமல்ல பெண்ணையுமே சமூகத்திலிருந்து விலக்கி வைத்தும், தாழ்த்தி வைத்தும் பார்க்கின்றது இந்தச் சமுதாயம் என்பதனை விளக்கும் விதமாக அமைகிறது.

வீட்டில் கரையான்கள் படர்ந்து இருந்தால் சுலபமாக அரித்தெடுத்து அதனை கலைத்து விடலாம். ஆனால், பெண்ணின் மனது கரையான் போல் ஆகிவிட்டால்

மருந்து எங்கே இருக்கிறது என்பதுதான் தெரியவில்லை. கரையான் போன்றது பெண்ணின் மனது என்பதனை தமிழச்சி எதார்த்தமாக கையாளுகிறார்.

“அரைகுறையாய் முடித்தாலும்

அழவேண்டுமோ முழுக்கூலியும்……

கலக்குதலில் கலப்படமோ

புற்றரித்துச் சனியனாய்

அல்லாடும் என்

மனக்கரையானுக்கு

அவன் கைவசம்

மருந்து இருக்கா?..”4

என்னும் வரிகள் அலை பாய்கின்ற பெண்ணின் மனது உணர்வுப் பூர்வமானது என்பது தமிழச்சியின் எழுத்துக்களில் செல்லத் தெளிவாக விளக்கப்படுகிறது.

ஒரு பெண் தனக்குத் தோன்றுகின்ற உள்ளத்து உணர்வுகளை கவிதையாக வடிக்க முற்படுகிறாள். ஆனால், கதவு என்பது அவளுடைய இறுதியில்லையாக அமைகின்றது. கதவின் இடுக்கிற்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றப் பெண்மையை தன் கவிதை வாயிலாக வெளிக்காட்டுகிறார் கவிஞர்.

“இப்படியாய்

நீளும் கவிதைகள் அவ

ளின் கதவுகளில்லா

வீடுகளைப் பற்றிய

கனவின் மடிப்புகளோடு

அஞ்சல் செய்யப்படாமலேயே

மக்கி போயிருக்கின்றன

அந்தக் கதவிடுப்புகளில்..”5

என்னும் வரிகளில் வீட்டின் கதவுகளுக்குப் பூசை செய்யப்படுகிறது, மெருகூட்டப்படுகிறது, சந்தனம் பூசப்படுகிறது. எத்துனைச் சிறப்புகள் செய்த போதிலும் அதுவே எல்லையாக நிற்கின்றது. அதேபோல்தான் இப்பெண்ணும் வீட்டுக்குள்ளேயே முடங்குகிறாள் என்பது நிதர்சனமான உண்மை என்பதை அறிய முடிகிறது.

நீர்நிலை எப்படி அடித்துக் கொண்டு வெள்ளமாக செல்லுகிறதோ அதுபோல் ஒரு பெண்ணிற்கு சுதந்திரமும் கிடைக்க வேண்டும் என்பதனைத் தான் கீழ்காணும் கவிதையில் தமிழச்சி விளக்குகிறார்.

“எனதூர்க்

கரிசல் மண்ணில் மல்லாந்து

வட்டார மொழி சுழிக்க

வடிவங்களின்

முகம் தொலைத்து

நதிநீராய்

புரண்டோட வேண்டுமெனக்கு

இலக்கின்றி..”6

என்று தனக்கு சுதந்திரம் இல்லாத நிலையை இவ்வழிகளின் மூலமாக ஆட்சி ஊமையாகக் கொண்ட பெண்ணிய உணர்வு இங்கு வெட்டாரவெளியாகிறது.

குடும்ப அமைப்புக்குள் பெண்ணின் இருப்பு நிலையை ஆழமாகவும், அதே நேரத்தில் எளிமையான வார்த்தைகள் வழியாகவும் சொல்லும் இந்தக் கவிதையை வாசித்துப் பாருங்கள்,

“கதவுகளையும்

திரைச்சீலைகளையும் தாண்டி

சுவர்களில் முதுகு தேய்த்து

சன்னல் கம்பிகளில் தயங்கியபடி

…….

வெளியேறுகிது

நிறுத்தப்பட்டிருந்த

மின்விசிறியின் வியர்வையுடன்

பூட்டியிருந்த அறைக்குள்

மூச்சடைத்திருந்தது காற்று…”7

இக்கவிதைக்குத் தமிழச்சி தந்துள்ள தலைப்பு – ‘விடுதலை’ இதே உணர்வைச் சொல்லாக் கதை என்னும் கவிதைகயில் வீட்டின் நிலைப்படியே கதவினைத் தீர்மானிக்கிறது. என்ற படிமம் தீவிரமாகவே சொல்கிறது. இந்தப் படிமத்தின் தொடச்சியாகப் பின்வரும் வரிகளை வாசிக்கும்போது, பெண்ணின் இருப்பைத் தமிழச்சியின் கவிதைகள் பதிவு செய்யும் விதத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

‘பேசாத மொழி’ என்னும் கவிதையிலிருந்து வீட்டில் இருக்கும் பெண்ணுக்கு ம்டடுமல்ல. வீடு அவளது விருப்பங்கள் பலவற்றிற்கும் இறுக்கத்தையே உண்டாக்கிடும் விதமாக உள்ளது என்பதைப் பின்வரும் கவிதை மூலமாக காண முடிகிறது,

“நேசமுடன் பிரிகின்ற

கரங்களைச் சற்று

ஆதாரத்துடன்

பற்றியிருக்கின்ற

கதவிற்கு அதிகாரம்

இருப்பதில்லை

………

ஆயினும்

அவை

இல்லத்திற்கு மிக

இன்றியமையாhவை..”8

பெண்ணாக உணர்தல், பெண்ணின் இருப்பை உறுதி செய்தல், பெண்ணின் மௌனத்திற்கு அர்த்தம் சொல்லல் என விரியும் தமிழச்சியின் பெண் அடையாளக் எழுத்தகள் தமிழில் தங்களைப் பெண்ணியக் கவிகளாகக் காட்டிக்கொள்ளும் பலரிடமிருந்து வேறுபட்ட தோனியில் இருப்பதை அக்கவிதைக்களுக்குள் வரும் பெண் தன்னிலை உருவாக்கங்களே உணர்த்துகின்றன.

குடும்பம் இறுக்கமானதாகவும் பெண்ணிற்கான வெளியைத் தர மறுப்பதாக இருந்தாலும், அப்படி இருப்பதற்கு ஆணின் இருப்பே காரணமாக இருக்கிறது என்பதை உணர்ந்த குரலாக இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் குரலோடு சேர்த்துப் பெண்ணுக்கு ஆணின் அருகிருப்பும், ஆணுக்குப் பெண்ணின் சிநேகமும், உடல் ஸ்பரிசங்களுமான உயிரியல் வேட்கையின் தவிர்க்க முடியாமையைச் சொல்லும் கவிதை வரிகளைக் கீழ்க் காணும் முறையில் எழுதியிருக்கிறார் கவிஞர்,

“மூச்சுத் திணறும்

தொட்டிச் செடிகளைச்

சூரிய வெயில்

படர்ந்திருக்கும்

படிக்கட்டுகளில்

வைத்துவிட்டு

நீ வந்தால்

நாம்

இறுக்கமின்றிப் பேசலாம்…”9

என்னும் வரிகளிலிருந்து பெண்ணின் காதல் மொழிகளைக் காண முடிகிறது. அடுத்து, ‘தோல்வி’ என்னும் கவிதை பெண்ணின் நாணல் தன்மையை வெளிக்காட்டுகிறது. இச்சமுதாத்தில் முன்னுதாரணமாக வர வேண்டும் என்று ஒரு

பெண் ஆசை கொள்வதும், அதுவே சமூதாயத்தின் சித்தரிப்பு காரணமாக நாணம் கொள்வதுமான பண்புணர்வுகளை இங்கனம் எடுத்துக்காட்டுகிறார்.

“வேட்டை நாயின்

வீர்யத்துடன்

திறக்கப்படுகின்ற

பேனா

சுகவீனமுற்றிருக்கின்ற

முதியவளின்

பலவீன முனகல் போல்

மூடப்படுகிறது..”10

இவ்வாறாக எழுதப் பெற்றுள்ள கவிதைகள் வெளிப்படையாகப் பெண் குரலைப் பதிவு செய்திருக்கிறார் தமிழச்சி தங்கபாண்டியன்.

**முடிவுரை**

பெண்களைப் பற்றி சித்தரிக்கின்ற புதிய நோக்கும், புதிய பார்வையும் தமிழச்சியின் எழுத்துகளில் மிளர்கின்றன. பெண்களுடன் முரண்பாடாக அமைந்த உறவு நிலைகள் பற்றி கவிதைகள் பேசுவதில்லை. முற்றிலும் சுதந்திரப் பரப்பாகவே அமைந்திருக்கின்றது.

**அடிக்குறிப்புகள்**

1. 21-ம் நூற்றாண்டில் பெண்ணியம், பாலமுருகன் அ. 2005, ப.01

2. மேலது, ப.35.

3. எஞ்சோட்டுப்பெண், தமிழச்சி தங்கபாண்டியன், 2003, ப.60.

4. மேலது, ப.69.

5. மேலது, ப.75.

6. மேலது, ப.85.

7. மேலது, ப.61.

8. மேலது, ப.130.

9. மேலது, ப.92.

10. மேலது, ப.43.